# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2038/33 - 2017 සැප්තැම්බර් මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.09.28

*2038/33 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: என்வைஜீஎம்/எல்ஏஎன்/7/41.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 13/99/வீஈ/33.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

காலி மாவட்டத்தில், பெந்தர வலல்லாவிட்ட கோரலய தெற்கு - நியாகம பிரதேச செயலாளர் பிரிவில், 30 பீ வடக்கு பிட்டிகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ளதும், நில அளவை மாஅதிபரால் தயாரிக்கப்பட்ட மு. கி. ப. 592, மேலதிக இல. 26 உம் பத்திர இல. 27 உம் கொண்ட வரைபடத்தில் காட்டப்பட்ட காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:-

1. **துண்டு இல. 1028**

காணியின் பெயர் : மிரிஸ்வத்து முகலான; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்: டபிள்யூ. பீ. திலக்கரத்ன பீரிஸ் (மரணமடைந்துள்ளார்) (மனைவியும் இரு பிள்ளைகளும் உயிருடன் இருக்கின்றனர்); விஸ்தீரணம்: 2.0462 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக் காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நியாகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். பி. ஜீ. பிரகீத் ரசிக குமார,
பிரதேச செயலாளர்,
நியாகம.

பிரதேச செயலகம்,
நியாகம, தல்கஸ்வல,
2017, செத்தெம்பர் 06.

*10 - 355*



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*